மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாடசா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைத் தனியாகத் தொழிலமைச்சர் அவர்களுக்குப் போட்டால் நிச்சயமாகப் பதில் சொல்லுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

Land for Mentally Retarded Children's Home

*117 *Q.*—Thiru R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state--

(*a*) whether there are proposals under the consideration of the Government to grant lands for locating the home for the mentally retarded children run by the Guild of Service at Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) சென்னை கில்ட் ஆப் சர்விஸின் ஆதரவில் இயங்கும் பால விகாரிலுள்ள மன வளர்ச்சி குன்றிய சிறுவர் சிறுமியர்க்காக ஒரு விவசாயப் பண்ணை தொடங்குவதற்கு, செங்கற்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், ஜல்லடையன்பேட்டை கிராமத்தில் 25 ஏக்கரா நிலத்தை அளிக்க அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்த மன நோய் இருக்கின்ற குழந்தைகளுக்கு விடுதி கட்ட வேண்டுமென்று மகாபோதி சொசைடி மூலமாக விண்ணப்பம் அரசுக்கு வந்திருக்கிறதா? என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றிய விவரம் இப்போது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சொல்ல முடியும்.

எண்ணெய், பருப்பு விற்பனை

*118 **வினு—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

எண்ணெய், பருப்பு வகைகளின் விற்பனையை அரசு வர்த்தக கார்ப்பரேஷன் நேரடியாக மேற்கொள்ள உத்தேசித்துள்ளதா?